நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.48/2022**

**P.W. 5 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாந்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | தமிழ்செல்வன் |
| கிராமம் | : | காட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 5** |
| வயது | : | 39 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 07–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள்ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–03.36PM )

1. நான் தற்போது காட்டுரில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். 2021ம் வருடம் மாலை 4.00 மணி அளவில் நான் சண்டை நடந்த இடத்தில் ஆடு மேய்த்து கொண்டிருந்தேன். அப்போது சின்னசாமியும், அவருது மனைவி லட்சுமியும் பொது வழி தடத்தில் நடந்து வந்தார்கள். அங்கிருந்த

வையாபுரி, மினியன் மாரியப்பன் ஆகியோர் சின்னசாமியை இந்த வழியில் உனக்கு நடக்க வழி இல்லை தேவடியா பையா என்று சொல்லி திட்டினார்கள்.

2. வையாபுரி, சின்னசாமியை தடுத்தி நிறுத்தி கட்டையால் அவருடைய தலையில் அடித்துவிட்டார். சண்டையை தடுக்க வந்த லட்சுமியை மினியன் கட்டையால் இடுப்பிலும், தோள்பட்டையிலும் அடித்தார். எதிரிகள் அடித்ததில் சின்னசாமி, லட்சுமி இருவரும் மயக்கம் அடைந்து கிழே விழுந்துவிட்டார்கள்.

3. இருவரையும் மேட்டுர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள். இன்று நீதிமன்றத்தில் எதிரி மாரியப்பன் தவிர மற்ற எதிரிகள் ஆஜரில் உள்ளனர். எதிரி மாரியப்பனை பார்த்தால் அடையாளம் சொல்வேன் . போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. அ.சா.1 சின்னசாமி, மற்றும் அ.சா.2 லட்சுமி ஆகிய இருவரும் எனது பெரியப்பா மற்றும் பெரியம்மா ஆவார்கள். எனது அப்பாவின் பெயர் பழனியப்பன். இந்த வழக்கு சம்பவத்துக்கு முன்பாகவே எனது அப்பா தரப்பினருக்கும் ஆஜர் எதிரிகள் தரப்பினருக்கும் நிலம் சம்பந்தமான முன் விரோதம் உள்ளது என்றால் சரிதான். அது சம்பந்தமாக உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருவது எனக்கு தெரியும்.

2. எனது அப்பா, அம்மா மற்றும் பெரியப்பா தரப்பினர் எதிரிகள் நிலத்திற்கு செல்லும் பாசன நீர்குழாயையும் குடிநீர் குழாயையும் உடைத்து விட்டதாக மேட்டுர் காவல் நிலைத்திலும், மேட்டுர் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திலும் புகார் கொடுத்து வந்து பார்த்தனர் என்றால் சரிதான். அதுபோல் காவல் துறையினர் வந்தபோது உதவி ஆய்வாளர் விக்னேஸ்வரமூர்த்தி வந்தார் என்றால் சரிதான்.

3. உதவி ஆய்வாளர் வந்து எங்களுடன் இணைந்து கொண்டு எதிரிகளை அடித்து அவர் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடமும், முதலமைச்சர் தனிப்பிரிவுக்கும் எங்கள் மீதும் உதவி ஆய்வாளர் மீதும் எதிரிகள் புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. காவல் துறை விசாரணையில் எனது பெரியப்பா சின்னசாமி காட்டில் ஆடு மேய்த்து கொண்டிருக்கும்போது கெட்ட வார்த்தைகளால் திட்டியுள்ளதாக சொல்லியுள்ளேன்.

4. சம்பவம் நடந்து இரண்டு மூன்று நாட்கள் கழித்து போலீசார் விசாரித்தனர். உதவி ஆய்வாளர் விக்னேஸ்வரமூர்த்தி என்பவர் தான் விசாரித்தார். கெட்ட வார்த்தை பேசியதாக சொன்ன சமயத்தில் இருதரப்பினர்களும் அவரவர் காட்டுக்குள் நின்று கொண்டுதான் பேசி கொண்டார்கள். காவல் துறை விசாரணையில் பிரச்சினையை நான் தடுக்க சென்றதாக நான் சொல்லவில்லை. நான் சொன்னவாறு சம்பவம் நடந்து இருந்தால் நான் போய் தடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. கட்டையாலும் , கற்களாலும் அடிதடி போட்டு கொண்டிருக்கும்போது இடையே சென்றால் எனக்கும்அடிபட்டுவிடும் என்று நான் தடுக்கவில்லை. அந்த விவரத்தை காவல் துறை விசாரணையிலும் சொன்னேன்.
5. சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட கட்டை சுமார் 3 அடி நீளமுள்ள உருட்டு கட்டையாகும். அதன் விட்டம் சுமார் எவ்வளவு இருக்கும் என்று சரியாக சொல்லமுடியாது. சாட்சி இரண்டு கைகளையும் ஒன்றாக காட்டி சுமார் 3 இன்ச் விட்டம் அளவுக்கு கட்டை இருந்ததாக தெரிவிக்கிறார். அந்த கட்டையை போலீசாருக்கு அடையாளம் காட்டி நான் எடுத்து கொடுக்கவில்லை.
6. இந்த சம்பவம் சுமார் 1 மணி நேரம் நடந்திருக்கும். ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் சம்பவ இடத்திற்கு வரும் முன்பாகவே வாய்க்கால் கரை அருகில் எதிரிகள் காட்டின் அருகிலேயே வழி மறித்து அதில் எதிரிகள் சென்றுவிட்டார்கள். உடனடியாக எனது பெரியப்பா மற்றும் பெரியம்மா இரு சக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றார்கள். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் எனது பெரியப்பா மற்றும் பெரியம்மாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் யார் என்று எனக்கு குறிப்பாக தெரியாது.
7. மேற்படி எதிரிகள் ஆம்புலன்ஸில் சென்ற விவரத்தை காவல் துறை விசாரணையில் சொன்னேன். நான் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். சம்பவத்து அன்று இரவே பார்த்தேன். எதிரிகளும் அரசு மருத்துவமனையில்தான் சிகிச்சை பெற்றார்கள். நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் சிவில் வழக்கு உள்ளதாலும், நாங்கள் காவல் துறையினருடன் கை சேர்ந்து கொண்டு எதிரிகளை தாக்கியது சம்பந்தமாக ஏற்கனவே புகார் நிலுவையில் இருந்தது என்றாலும், அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக காவல் துறை உதவியுடன் நடக்காத ஒரு சம்பவத்தை நடந்ததாக

உருவாக்கி பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், நான் பிறர் இதுபோல் சொல்லு என்று சொல்லி கொடுத்தன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், உண்மையில் எனது பெரியப்பா தரப்பினருக்கு எந்த காயமும் ஏற்பட வில்லை என்றாலும் நாங்கள் தான் ஒரு குழுவாக சேர்ந்து கொண்டு எதிரிகளுக்கு தொந்தரவு கொடுத்து வருகிறோம் என்றால் சரியல்ல. பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அரசு தரப்பில் சான்று பொருட்கள் அடையாளம் காண்பது குறித்து மறுவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அதற்குஎதிரி தரப்பு வழக்கறிஞர் சம்பவ இடத்திலிருந்து இந்த சாட்சி கட்டைகளை அடையாளம் காட்டி எடுத்து கொடுக்காதால் அவரை வைத்து சான்று பொருட்களை அடையாளம் காண முடியாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி சாட்சி சம்பவத்திற்கு கட்டை பயன்படுத்தப்பட்டது பற்றி சாட்சியம் அளித்துள்ளதால் மறுவிசாரணைக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**

8. என்னிடம் காட்டப்படும் கட்டைகளில்(அ.சா.பொ.1) எந்த கட்டையால் அடித்தார்கள் என்று என்னால் குறிப்பாக சொல்லமுடியாது. மேற்படி காட்டப்பட்ட மூன்று கட்டைகளில் ஒரு கட்டையை காட்டி இந்த அளவுள்ள கட்டை என்று சொல்கிறார் ஆனால் இந்த கட்டையால் தான் அடித்தார்களா என்று என்னால் குறிப்பாக சொல்ல முடியாது.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—04.25PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**